செய்தி வெளியீடு எண்: 869 நாள் : 7.10.2010

**செய்தி வெளியீடு**

## தமிழகத்தின் தொழில் வளம் குறித்த "தமிழ்நாடு வளர்ச்சியின் தாயகம்" கையேடு!

# முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார்!

## துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பெற்றுக் கொண்டார்!

இந்தியாவின் தென்திசை நுழைவாயிலாக விளங்கும் தமிழ்நாடு, முதலீட்டாளர்களுக்குத் தகுந்த வாய்ப்புகளை வழங்குவதில் பிற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் புதிய தொழில்கள் பலவற்றை உருவாக்கித் தமிழகம் தொழில் துறையில் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. மேலும், அந்நிய நேரடி முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கவல்ல முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் உருவாகியுள்ளது.

இத்தகைய சாதனைகளையும், முதலீட்டாளர்கள் விரும்பும் நேயமிக்க அரசின் தொழிற்கொள்கைகள், வெளிப்படையான அணுகுமுறைகள், திறமையும் தகுதியும் வாய்ந்த அளப்பரிய மனித வளம் ஆகியவற்றையும் அனைவருக்கும், குறிப்பாக, முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்கும் பாங்கில் கையேடு ஒன்றினைத் தமிழக அரசின் தொழில் துறை தயாரித்துள்ளது.

"தமிழ்நாடு, வளர்ச்சியின் தாயகம்" எனும் இக்கையேட்டின் வாயிலாகப் பல ஆண்டுகளாகத் தமிழகம் கண்டு வரும் தொழில் வளர்ச்சியின் வரலாற்றை – குறிப்பாக, கடந்த நான்கு ஆண்டுகாலத் தொழில் துறைச் சாதனைகளை எடுத்துரைப்பதற்கான ஒரு சீரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் செழிப்பான மரபுகள், பண்பாடுகள், ஒப்புயர்வற்ற தமிழ்மொழியின் சிறப்புகள் அனைத்தும் இக்கையேட்டில் இடம்பெற்றிருப்பது இதன் ஒரு தனிச்சிறப்பாகும்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டுள்ள இக்கையேட்டினை புனித ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் கலைஞர் இன்று வெளியிட்டார். இதன் முதல் பிரதியை துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பெற்றுக் கொண்டார். அப்போது, தமிழகத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகளைத் திரட்டும் வகையில் அரசு முறை பயணமாக சீனா மற்றும் தென்கொரிய நாடுகளுக்கு அண்மையில் சென்று திரும்பிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், தனது பயணத்தின் மூலம் 2 ஆண்டுகளில் 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குத் தமிழகத்தில் தொழில் முதலீடுகள் செய்யப்படும் எனவும், இம்முதலீடுகள் மூலம் 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது, டிட்கோ நிறுவனத்தின் தலைவர் திரு.தேபேந்திரநாத் சாரங்கி, தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.ராஜீவ்ரஞ்சன், தொழில் வழிகாட்டிக் குழும உப தலைவர் திரு. வேல்முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

***

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9